## OS No. 75/2017 , நாள்: 08.01.2021

பி.வா.சா.1 - முனியப்பன் ஆஜர், குறுக்கு விசாரணை தொடர்ச்சி-

வழக்கு தாக்கல் செய்துள்ள சொத்தில் தற்போது ஒரு ஓட்டு வீடுதான் உள்ளது என்றால் 2 வீடுகள் இருந்தன. ஒன்றை எடுத்துவிட்டு தற்போது கடகால் போட்டுள்ளேன் மற்றொரு ஓட்டுவீடு உள்ளது. 2 வீடுகளுமே ஓட்டுவீடுதானா என்றால் சரிதான். கூரைவீடு எதுவும் இல்லையா என்றால் இல்லை. இடிப்பதற்கு முன்பு இருந்த வீட்டின் நீள அகலம் என்னவென்றால் தற்போது கட்டியுள்ள 21 X 22 அடிகளாகும். அதே அளவுக்கு தற்போது கடகால் போட்டுள்ளேனா என்றால் அதே அளவுடன் சேர்த்து அதிகமாக கழிவறை சேர்த்துள்ளேன். கழிவறையின் அளவுகள் என்னவென்றால் நீளம் 6 அடி, அகலம் 5 அடியாகும். வழக்குசொத்தில் உள்ள ஓட்டுவிட்டிற்கு தெற்குபக்கத்தில் மாட்டுக்கொட்டாய் உள்ளது என்றால் சரிதான். அது எப்போது கட்டப்பட்டது என்றால் 40-50 ஆண்டுகளாகவே இருந்து வருகிறது. தற்போது உள்ள ஓட்டுவீட்டிற்கும் மாட்டுகொட்டாய்க்கும் ஒரு கூரை வீடு இருந்ததா என்றால் இல்லை. ஏற்கனவே ஒரு சாலை வீடு தற்போது குடியிருக்கும் ஓட்டுவிட்டிற்கும் மாட்டுகொட்டாய்க்கு இடையில் இருந்தது என்றும் அது சிதலமடைந்து விட்டது என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் 1986ம் ஆண்டுக்கு முன்பு சாலை வீடு இருந்ததாக கூறியிருக்கிறேனா என்றால் அதைத்தான் ஓட்டுவீடாக கட்டிவிட்டேன். நான் சாலைவீடு பழுதடைந்ததால் ஓட்டுவீடாக கட்டினேன் என்று வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. தற்போது புதியதாக வீடு கட்ட போடப்பட்டுள்ள கடகால் போட்ட இடத்தில் கூரை வீடு இருந்ததில்லை என்றால் இருந்ததால்தான் அதே அளவிற்கு கட்டி வாழ்ந்து வருகிறோம். கழிவறையை பொறுத்து அதிகமாக கட்டியுள்ளது குறித்து என்னுடைய பதிலுரையில் கூறியிருக்கிறனோ என்றால் எங்கள் இடத்தில் கட்டுவதற்கு சொல்லத்தேவையில்லை. ஏற்கனவே இருந்த கூரைவீட்டை அகற்றிவிட்டு அந்த இடத்தில் ஓட்டுவீடு கட்டியதாக கூறுவது பொய்யானது என்று

சொன்னால் சரியல்ல. அவ்வாறு எதிர்வழக்குரையில் கூறவில்லை என்றால் சரியல்ல. வாதிகளுக்கு கூட்டுப்பாத்தியம் உள்ள வழக்கு சொத்தில் தனிப்பட்ட முறையில் நான் கடகால் போட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் தற்போது புதியதாக போடப்பட்டுள்ள கடகாலினால் வாதிகளின் உரிமைக்கு பங்கம் எற்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. தற்போது வழக்கு தாக்கல் செய்துள்ள சொத்து கூட்டாக உள்ளதா அல்லது பிரித்தாகி விட்டதாக என்றால் பிரித்ததால்தான் வாதிகள் விற்பனை செய்தார்கள். வாதிகளுக்கு எங்கு பாகம் கொடுக்கப்பட்டது என்றால் தற்போது நாங்கள் குடியிருக்கும் வீட்டிற்கு தென்புறம் 2.25 சென்ட் கொடுக்கப்பட்டுள்ளது. நீள அகலம் தெரியுமா என்றால் அளந்து பார்த்தால்தான் தெரியும். அந்த 2.25 சென்டிற்கு செக்குபந்தி தெரியுமா என்றால் மேற்கிலும், தெற்கிலும் என்னுடைய நிலம், கிழக்கிலும், வடக்கிலும் செந்திலுடைய நிலம் உள்ளது. நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை பார்வையிட்ட தாக்கல் செய்த அறிக்கையில் ஓட்டுவிட்டிற்கு தெற்குபுறம் அந்த 2.25 சென்ட் நிலம் உள்ளதா என்றால் மாட்டுகொட்டாய் உள்ள இடம்தான் அது. (தற்போது சாட்சி அதை வரைபடத்தில் குறிப்பிடவில்லை என்று கூறுகிறார்). வாதிகளுக்கு 2.25 சென்ட் பிரித்துக்கொடுத்தது எப்போது என்றால் 1984ம் ஆண்டு. வாய்மொழியாக பாகம் பிரிக்கப்பட்டதாக அல்லது பாகப்பிரிவினை பத்திரம் எழுதப்பட்டதா என்றால் வாய்மொழியாகத்தான் பிரிக்கப்பட்டது. அவ்வாறு 2.25 சென்ட் வாய்மொழியாக பிரிக்கப்பட்டது என்று நான் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் கூறியிருக்கிறேனா என்றால் கூறவில்லை. வழக்கு சொத்தில் புதியதாக நான்தான் கடகால் அமைத்து ஆக்கிரமிப்பு செய்து முயற்சித்துள்ளேன் என்றும் தற்போது வழக்கிற்காக 1984ம் ஆண்டே வாய்மொழியாக பாகம்பிரித்துக்கொடுக்கப்பட்டதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்குசொத்தில் உள்ள ஓட்டுவீடு மாட்டுகொட்டகை மற்றும் கடகால் போட்டுள்ள இடம் அனைத்தும் எனக்கு தனிப்பட்ட பாத்தியம் உள்ளது என்பதற்கு உரிமைக்கான ஆவணம் எதுவும் இல்லை என்றால் பட்டா உள்ளது அனுபவமும் உள்ளது. எத்தனை ஆண்டுகளாக உள்ளது என்றால் 1956ம் அண்டு முதல் உள்ளது. தற்போது

எனக்கு என்ன வயதாகிறது என்றால் 57 வயதாகிறது. நான் பிறப்பதற்கு முன்பே பாகம் ஆகிவிட்டதா என்றால் என் தந்தை அனுபவித்து வந்து தற்போது நான் அனுபவித்து வருகிறேன். எதிர்வழக்குரையில் 56 ஆண்டுகளாக அனுபவித்து வந்ததாக கூறியிருக்கிறேனா என்றால் கூறவில்லை. நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் தற்போதுள்ள ஓட்டு வீடு, மாட்டுகொட்டகை மற்றும் கடகால் ஆகியவற்றின் நீளம், அகலம் கூறவில்லை என்றால் கூறவில்லை. நீள அகலத்திறகான விவரத்தை கூறினால் நான்தான் கூடுதலாக கடகால் போட்ட விவரம் தெரிந்துவிடும் என்தபால்தான் அதுப்பற்றி கூறவில்லை என்றால் சரிதான். என்னுடைய எதிர்வழக்குரையிலேயே வாதிகளுக்கு கூட்டு பாத்தியம் இருப்பதாக ஒப்புக்கொண்டுவிட்டு அதற்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. தற்போது கடகால் போட்டுள்ள இடத்தில் நான் வீடு கட்டிவிட்டால் எதிர்காலத்தில் வாதிகள் அவர்களுடைய தனிப்பட்ட நிலங்களுக்கு தண்ணீர் பாய்ச்ச இயலாது என்று சொன்னால் சரியல்ல. வீடு கட்டிவிட்டால் வாதிகள் அந்த கிணற்றிற்கு செல்லமுடியாது ஏற்படும் என்றும், கிணற்றை அகலப்படுத்த முடியாது என்று சொன்னால் சரியல்ல. தற்போது என்னிடம் காட்டப்படும் ஆணையரின் வரைபடத்தல் குறிப்பிட்டுள்ளவாறு வழக்கு சொத்திற்கு ஒருப்பக்கம்தான் வழி உள்ளது என்றால் சரிதான். கட்டிடங்கள் வழியாக கால்வாயோ பைப்லைனோ எடுத்துசெல்லமுடியுமா என்றால் நிலங்கள் வழியாகத்தான் எடுத்துசெல்லமுடியும். நான் அந்த கடகால் போட்டுள்ள இடத்தில் வீடு கட்டிவிட்டால் தெற்குபக்கமிருந்தோ மேற்குபக்கமிருந்தோ கிணற்றுக்கு வரமுடியாது என்றால் மேற்குபுறமிருந்து மாமூலாக செல்லும் பாதை உள்ளது. என்னுடைய செயல் வாதிகளின் கூட்டுபாத்தியத்தை தடுக்கும்விதமாக உள்ளது என்றால் சரியல்ல. வாதிகளுக்கு ஈடு செய்யமுடியாத கஷ்டமும், நஷ்டமும் ஏற்பட்டவிடும் என்று சொன்னால் சரியல்ல. 25.8.2017ம் தேதியில் நானும் என்னுடைய ஆட்களும் அத்துமீறி கடகாலை போட்டுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் தற்போது குடியிருக்கும் ஓட்டுவீட்டிற்கான ஆவணங்கள் என்று சொன்னால் சரியல்ல. புகைபடங்கள்,

குறுந்தகடு ஆகியவை வழக்கிற்காக ஜோடனை செய்யப்பட்டவை என்று சொன்னால் சரியல்ல. வாதிகள் உண்மையான சங்கதிகளை கொண்டுதான் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றும் நாங்கள் பொய்யான சங்கதிகளை கூறி எதிர்வழக்காடி வருகிறோம் என்று சொன்னால் சரியல்ல. கூட்டுபாத்தியஸ்தர் என்ற முறையில் கட்டிடம் கட்ட எனக்கு தனிப்பட்ட உரிமை இல்லை என்பதால் வாதிகள் கோரியுள்ளபடி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

ஓம்./ஏ.செல்வகுமார்,பி.இ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி.